# புதியதொரு வரலாற்றைத் தொடங்கி வைத்த பொன்மகனே! வாழ்க! வாழ்க!



உதயமெனும் இளைஞர்தம் இதய மன்னன் !
உணர்வெலாம் தமிழர்நலம் நாடும் செல்வன் !
முதியவரும் தேடுகின்ற கட்டி வெல்லம் !
முன்னேற்றக் கழகத்தின் முத்துச் செல்வம் !
எதிரிகளை அதிரவைத்த இளைய சூரன்
எந்நாளும் ஏடுகளின் செய்தி வேந்தன் !
புதியதோர் வரலாற்றுப் பொன்னன் ! அன்னோன்
புத்துலகின் புதியசிற்பி வாழ்க ! வாழ்க !

இந்தியத்து வரலாறு ஏத்திப் போற்றும்
இணையில்லாக் கழகத்தின் எஃகுத் தூணாய்
முந்திவந்து முனைமுகத்தே தாங்கி நிற்கும்
முத்துவேலர் திருப்பேரன் ! மக்கள் நாடும்
விந்தியத்துத் தென்திசையில் விளைந்து நாளும்
வெற்றிகளைக் குவித்துவரும் வீர வீரன்
செந்தமிழன் சிங்கமகன் பிறந்த நாளில்
சேர்ந்திடுவோம் ! வாழ்த்திடுவோம்! வாழ்க! வாழ்க !

கழகத்தின் கொள்கைகள் இளைஞர் நெஞ்சில்
கனலெரியாய்ச் சுடர்விடவே தொகுதி தோறும்
சுழல்கின்ற பம்பரமாய்ச் சுற்றிச் சுற்றி
நடத்தியநின் பாசறைகள் எல்லாம் வீரக்
கழல்களாய் ! கணைகளாய் ! இளைஞர் தம்மைக்
கட்டிஈர்த்த காட்சிகளைக் கண்டதாலே
விழல்களாய் வீழ்ந்துவிட்ட வீணர் கூட்டம்
வெருண்டோடச் செய்தவரே வாழ்க ! வாழ்க !

கழகத்தை என்னூரில் தோற்று வித்து
இளைஞர்களை ஈர்த்திடவே படிப்பகம் கட்டிக்
கழகத்தை வளர்த்தவொரு தூய தொண்டன்
மாங்குடி இரத்தினத்தின் சிலைதி றந்து
கழகத்தின் தொண்டர்க்கும் சிலைநி றுத்தும்
புதியதொரு வரலாற்றைத் தொடங்கி வைத்த

கழகத்தின் கண்மணியே ! வாழ்க ! வாழ்க !
கருணைபொங்கும் பொன்மகனே வாழ்க ! வாழ்க!

எங்கள்ஊர் மாங்குடி ஏற்றம் காண
யான்வேண்ட மறுக்காமல் மனமு வந்து
பொங்குதமிழ் வளர்க்கும் சிங்கம் ! மாண்பார்
பொதுப்பணித் துறையமைச்சர் அண்ணன் வழங்க !
எங்களுடை மாவட்டச் செயலர் அண்ணன்
எஸ்கேகண்ட நூற்றாண்டு நூல கத்தில்
யாம்வைத்த கலைஞர்சிலை திறந்துவைத்த
மாண்புமிகு துணைமுதல்வர்
வாழ்க! வாழ்க!



**புலவர்**
**முத்து. வாவாசி**

# திராவிட மாடலின் இளையவர் வாழ்க! வாழ்க!



கழகத்தின்
உதயம்,
சமாதானம் இன்றி
சனாதனம் பேசும்
இளைஞர் அணி செயலாளர்,
துணை முதல்வர்
உதயநிதி ஸ்டாலின்
உதயதினம், இன்று

சேப்பாக்கம் திருவல்லிகேணி
மக்கள் ok ok
என்றதால்
சட்டமன்ற உறுப்பினர்,

எல்லோருக்கும் நண்பர் ஆனதால்,
அரசியலில் மனிதனாக
போற்றப்பட்டார்,
அதனால்
இவர் இருக்க
பயம் ஏன்
மனசு தங்கம்
என்றார்கள்,

வெல்ல முடியாது என்பதால்
கண்ணே கலைமானே என்று
கொஞ்சி மகிழ்கின்றனர்,
நெஞ்சுக்கு நீதியாய் இருப்பதால்,
திராவிடமாடல்
ஆட்சி பேசும்
மாமன்னன்
ஆனாய்,

தலைமைக்கு
துணை நின்று,
2019 இடைத்தேர்தல்
வெற்றி தந்தாய்,
2021 சட்டமன்ற தேர்தலில்
ஆட்சி தந்தாய்,
2022 உள்ளாட்சி
தேர்தலில்
தலைவர்கள் தந்தாய்,

மேயர்கள் தந்தாய்,
பாராளுமன்ற தேர்தலிலும்
100க்கு 100
தந்தாய்

இளைஞர் நலம்
விளையாட்டு துறை அமைச்சர்
என்பதால்
விளையாட்டில்
தமிழ்நாடு
உலக அளவில்
தங்கம்குவிக்கும்மாநிலமானது,

திட்டமிடல்
மேம்பாட்டுத் துறை
என்பதால்
திட்டங்கள் பலதந்து,
ஆய்வுகள் மேற்கொண்டதால்
பேரிடரில்
மக்கள் முன்னின்று
துணை நிற்கும்
முதல் ஆளானாய்
துணை முதல்வரானாய்,

அழகிய ஆளுமை நிறைந்த
சாமர்த்தியமான
நேர்த்தியான
பேச்சு,
உன் எளிய பேச்சு
மக்கள்
விரும்பும் பேச்சு,

உன் அரசியல்
எழுச்சி
யார்
இந்த இளைஞர்
என்று
இந்தியாவை
திரும்பிப் பார்க்க வைத்தது,

நாளை
மக்கள் விரும்பும் தலைவராக,
மக்கள் விரும்பும்
முதல் ஆளாக,
தலைமையின்
ஆளுமையாக,
வரவேண்டும்! வருவாய்!
வளரவேண்டும்! வளர்வாய்!

திராவிடமாடலின்
இளையவருக்கு
பிறந்தநாள்
வாழ்த்துக்கள்,

**வேலூர் த.சௌந்தர்**

## ஜன.14 பொங்கல் தினத்தன்று தேர்வுகளை நடத்துவதா?

# தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தேர்வுத் தேதியை மாற்றிட வேண்டும்!

### நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஒத்தி வைப்பு தீர்மானம் தாக்கல்!

**புதுடெல்லி, நவ.27 -**

**ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் ICAI, தமிழ்நாட்டில் சி.ஏ. பவுண்டேஷன் தேர்வுகளை ஜனவரி 14 பொங்கல் தினத்தன்று நடத்தத் திட்ட மிட்டுள்ளது. தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து உடனடியாக இந்த தேர்விற்கான தேதியை மாற்றியமைக்கக் கோரி தி.மு.க.வின் நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், ஒத்திவைப்பு தீர்மானத்தைத் தாக்கல் செய்துள்ளார்.**

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி தாக்கல் செய்த ஒத்திவைப்பு தீர்மானம் வருமாறு:

*2025 ஜனவரி 14 மற்றும் 16 ஆம் தேதிகளில் CA தேர்வைப் பொங்கல் பண்டிகை அன்று நடத்தும் முடிவு, தமிழகத்தின் கலாச்சார மரபுகள் மற்றும் மக்களின் உணர்வுகளை ஒன்றிய அரசு புறக்கணிப்பதை எடுத்துக் காட்டுகிறது.*

*பொங்கல் வெறும் பண்டிகை அல்ல; இது தமிழ் பாரம்பரியத்தின் உயிர் நாடியாகும். குடும்பங்கள் ஒன்று கூடி அவர்களின் கலாச்சாரம் மற்றும் விவசாய வாழ்க்கை முறையைக் கொண்டாடும் பண்டிகை தான் பொங்கல். இது போன்ற முக்கியமான தருணத்தில் தேர்வுகளைத் திட்டமிடுவது மாணவர்கள் மற்றும் குடும்பத்தினர் மீது*



*தேவையற்ற மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.*

*மகர சங்கராந்தி போன்ற பண்டிகைகள் இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது என்று கூறி விமர்சனங்களைத் திசை திருப்ப பாஜக முயற்சிக்கும் அதே வேளையில், இந்த வாதம் தமிழர்களின் பொங்கல் பண்டிகையின் தனித்துவத்தை அங்கீகரிக்கத் தவறிவிட்டது.*

*தீபாவளி (இந்த மாதம் நவம்பர் 2024) மற்றும் மக்களவை தேர்தல் (மே 2024) போன்ற காரணங்களுக்காகத் தேர்வுகளை ஒத்திவைத்த அதே ஐசிஏஐ, இப்போது தமிழகத்தின் மிக முக்கியமான பண்டிகைக்கு இடமளிக்க மறுப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஒன்றிய அரசின் உணர்வின்மை எடுத்துக்காட்டுகிறது. நமது நாட்டின் பன்முகப் பண்பாட்டுக் கட்டமைப்பில் அரசு காட்டும் அலட்சியம், தமிழ் அடையாளத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் அதன் தொடர்ச்சியான முயற்சிகளைப் பிரதிபலிக்கிறது.*

*ICAI என்பது பாராளுமன்றச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். ஒன்றிய அரசு மாநில அரசுகளின் மரபுகளை மதித்து, தேர்வுகளை மறு அட்டவணைப் படுத்த ICAI அமைப்புக்கு உடனடியாக உத்தரவிட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு, தமிழகத்தின் மீதான அக்கறையி ன்மையை மேலும் வெளிப்படுத்துவதோடு, அதன் தமிழர் விரோத அணுகுமுறையின் கருத்தை வலுப்படுத்துவதையே காட்டுகிறது.*

*இவ்வாறு கனிமொழி கருணாநிதி ஒத்தி வைப்பு தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளார்.*

## நாட்டின் பொருளாதாரத்தை – மாணவர்களின் வேலை வாய்ப்பைப் பெருக்கிட

# ஒன்றிய அரசிடம் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

### மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

*புதுடெல்லி, நவ. 27 -*

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர், திரு. எஸ். ஜெகத்ரட்கன் நேற்று 25 நவம்பர் 2024 மக்களவையில், நாட்டின் பொருளாதாரத்தையும் மாணவர்களிடையே வேலை வாய்பினைப் பெருக்கிட, பயிற்சி வகுப்புகளுக்கான திட்டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என்றும், அதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்றும். அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜம்தார் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.*

*ஒன்றிய அரசின் கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜம்தார் அளித்த பதில் :*

*மாணவர்களின் பள்ளி மற்றும் கல்லூரி கல்வியுடன், அவர்களின் திறனையும் மேம்படுத்தும் வகையில், ஒன்றிய அரசு தேசிய கல்விக் கொள்கை 2020 என்ற பெருந்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது என்றும், இதன்மூலம் தொழிற் துறையினருக்கும் கல்வித் துறையினருக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், உயர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான பயிற்சி வகுப்புகளை மேம்படுத்தத் தேவையான கொள்கை முடிவுகளை பல்கலைக்கழக மானியக் குழு எடுத்துள்ளது என்*



*றும், ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.*

*மேலும், தொழிற் கல்வியை மேம்படுத்தவும், தொழிற்சாலைகளில் மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகளை அதிகரிக்கவும், தேவையான பாடத்திட்டங்களை அனைத்திந்திய தொழிற் கல்விக் கழகம் உருவாக்கியுள்ளது என்றும், இதற்கான தேசிய பயிற்சி வகுப்பு இணைய தளங்கள் கல்வித் துறையுடன் இணைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.*

*பிரதம மந்திரி பயிற்சி வகுப்புகள் திட்டம் 2024ன் படி, மாணவர்களின் திறனை மேம்படுத்தவும், தொழிற்கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பினை பெருக்கவும் தேவையான முயற்சிகளை கூட்டாண்மை விவகாரங்கள் துறையின் மூலம் ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளது என்றும். பல்வேறு தொழிற்களுக்கு தேவையான திறனையும், வேலைவாய்ப்களைப் பெறும் வகையி;ல் இணையதளங்களின் வழி பல்வேறு செயலிகள் உருவாக்கப்பட்டு, அவற்றின் மூலம் மாணவர்களுக்கு தேவையான நிதியுதவிகளையும், ஒருங்கினைந்த பயிற்சிகளையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், ஒன்றிய அரசின் கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜம்தார், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மணப்பாறை இரா. வீராசாமி
### நவம்பர் 27 (2010)



**மணப்பாறை நகரத்திற்குட்பட்ட வட்டக் கிளைக் கழகச் செயலாளராக பணியாற்றி, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**1986ல் மணப்பாறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**மும்முனைப் போராட்டத்திலும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தாம்பரத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

*தாம்பரம், நவ.26-*

*தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் வழியில் தடம் மாறாமல் தடுமாறாமல். திராவிட இயக்கத்தின் கொள்கை போர் வீரன் இளைஞர் அணியின் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை மாநகர் முழுவதும் எழுச்சியோடும் மகிழ்ச்சியோடும் கொண்டாடிடுவீர்.*

*தாம்பரம் மாநகரத்துக்கு உட்பட்ட பத்து பகுதி கழகத்திற்கு உட்பட்ட 70 வட்டங்களிலும் புதிய கொடி கம்பங்கள் அமைத்து கழகத்தின் இரு வண்ணக் கொடியை உயர்த்தி ஒலி ஒளி அமைத்து எளியோர் நலம் காக்கும் அரசாக திகழ்கிற நமது அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி பொதுமக்களுக்கும் மாணவ - மாணவிகளுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிற்றுண்டிகள் உணவுகள் ஆதரவற்றோர் முதியோர் இல்லங்களில் அறுசுவை உணவு மற்றும் உபகரண உதவிகள் வழங்கி அனைத்து தரப்பினரும் பங்கேற்கக்கூடிய வகையில் இளைஞர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி கொண்டாடிட வேண்டும். நிகழ்ச்சியினை மாற்றாரும் வியக்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமாய் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கரூர் வாசுகி முருகேசன்
### நவம்பர் 27 (2009)



**கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் துடிப்புமிக்க வீராங்கனையாக கழகத்தில் செயலாற்றி; கழகத்தின் மீதும் தலைவர் கலைஞர் மீதும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவராக விளங்கினார்.**

**கழகம் கட்டளையிட்ட போராட்டத்தில் எல்லாம் கலந்து கொண்டு இன்முகத்துடன் சிறை சென்ற ஆற்றல்மிகு வீராங்கனையாகத் திகழ்ந்தவர்.**

**மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது இறுதிமூச்சு வரை இரவுபகல் பாராமல் ஓய்வின்றி உழைத்தவர்.**

**1996ஆம் ஆண்டில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**“பெரியாரும் அண்ணாவும் கண்ட பெண்ணுரிமைக்கோர் எடுத்துக்காட்டாய் அரிதாகச் சில வீர மகளிர் அணிவகுக்கும் வரிசையிலே ஆற்றல்மிகு வீராங்கனையாக வாய்த்தவரே! அண்ணன் நானிருக்க; ஆயிரமாயிரம் அன்பு உடன்பிறப்பனையார் கதறியழ எமைப் பிரிந்து ஏன் மறைந்தாய் ? ஆறாதம்மா இந்தப் புண் எம் நெஞ்சில் என்றைக்கும் நினைவு வடுவாக வாசுகி நீ நிலைத்திருப்பாய்!” என்று தலைவர் கலைஞர் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**